## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண். 10/2024**

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் திங்கள் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **ராஜா(எ) சிங்காரவேலன்** | **தொழில் :** | வெல்டிங் |
| **தந்தை பெயர் :** | **நாராயணசாமி** | **சமயம் :** | – |
| **ஊர் :** | பட்டுக்கோட்டை | **வயது** | 55 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**15.09.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக எனது பெயரிலுள்ள குடும்ப அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். எனது பெயரிலுள்ள ஆதார் அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ.2**ஆக குறியிடுகிறேன். இறந்த மாரியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். உலகநாதன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். பட்டுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.157/2022 ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B

District Munsif, Pattukkottai.